# ரூ. 3,500 கோடியில் தொழில் நகரம் அமைக்க ஜப்பானுடன் தமிழக அரசு ஒப்பந்தம்




தமிழக முதல்வர் ஜெயலலிதாவை தலைமைச் செயலகத்தில் செவ்வாய்க்கிழமை சந்தித்தார் ஜப்பான் நாட்டு வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் யுகியோ எடனோ.

**சென்னை, ஜன. 10:** சென்னைக்கு அருகே 1,500 ஏக்கரில் ரூ. 3,500 கோடியில் ஒருங்கிணைந்த தொழில் நகரம் அமைக்க ஜப்பான் நாட்டு அரசுடன் தமிழக அரசு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.

ஜப்பான் நாட்டு வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் யுகியோ எடனோ தலைமையிலான குழுவினர் தலைமைச் செயலகத்தில் முதல்வர் ஜெயலலிதாவை செவ்வாய்க்கிழமை சந்தித்தனர்.

அப்போது சென்னைக்கு அருகே ராஜீவ் காந்தி சாலையில் (பழைய மகாபலிபுரம் சாலை) 1,500 ஏக்கர் பரப்பில் ரூ. 3,500 கோடியில் ஒருங்கிணைந்த தொழில் நகரம் அமைக்க புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

அடுத்த 5 ஆண்டுக்குள் இந்த தொழில் நகரம் அமைக்கப்படும். இதன் மூலம் 40 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கும் என்ற தமிழக அரசு தெரிவித்துள்ளது. ஜப்பான் நிறுவனங்கள் தமிழகத்தில் தொழில் தொடங்க வசதியாக சென்னையில் வர்த்தக ஆதரவு மையம் அமைப்பதற்கும் ஜப்பான் மற்றும் தமிழக அரசுகளுக்கு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந் நிகழ்ச்சியில் பேசிய முதல்வர் ஜெயலலிதா, ஜப்பான் மற்றும் தமிழகத்துக்கு இடையேயான பண்பாட்டு உறவுகள் குறித்தும் தமிழ் - ஜப்பான் மொழிகளுக்கு இடையே உள்ள ஒற்றுமைகள் குறித்தும் பேசினார்.

இன்று கையெழுத்தான இரண்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் புதிய சகாப்தத்தை உருவாக்கும் என்று தெரிவித்தார்.

நிதி அமைச்சர் ஓ. பன்னீர்செல்வம், தலைமைச் செயலாளர் தேவேந்திர நாத் சாரங்கி உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.